மாநில தேர்தல் ஆணையம்
3வது மற்றும் 4வது மாடி, தேர்தல் துறை அலுவலக வளாகம், லாஸ் தோட்டம், வில்லியனூர் மெயின் ரோடு, ரெட்டியார்பாளையம், புதுச்சேரி 605 010. தொலைபேசி : 0413 – 2291118, 2291028.

புதுச்சேரி, தேதி, 22-09-2021

# செய்திக் குறிப்பு

உச்சநீதிமன்ற மேல் முறையீட்டு பொது வழக்கு எண்கள் 2364/2021 மற்றும் 4994-4995/2018 ஆகியவற்றில் வழங்கிய ஆணைப்படி, புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையம், புதுச்சேரியில் உள்ள 5 நகராட்சிகள் மற்றும் 10 கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான உள்ளாட்சி தேர்தல்களை மூன்று கட்டங்களாக நடத்துவதற்கான அறிவிப்பை 22-09-2021 அன்று பின்வருமாறு வெளியிடுகிறது.

| நகராட்சிக்கான தேர்தல் | | கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான தேர்தல் | | |
|---|---|---|---|---|
| நகராட்சி சேர்மன் | முனிசிபல் கவுன்சில் உறுப்பினர் | கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் | கிராம பஞ்சாயத்து தலைவர் | கிராம பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் |
| 5 | 116 | 108 | 108 | 812 |

தேர்தல் நடத்தப்படவுள்ள மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 243 D & T –ல் தரப்பட்டுள்ள ஷரத்துகளின் படியும், புதுச்சேரி நகராட்சி (பதவிகள் மற்றும் அலுவல்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை ஒதுக்கீடு), விதிகள் 1996, மற்றும் புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து (பதவிகள் மற்றும் அலுவல்கள் ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை ஒதுக்கீடு), விதிகள், 1996-ன் படியும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு தரப்படுகிறது.

| தேர்தல் பற்றிய விவரங்கள் | அட்டவணை இனத்தவர் | அட்டவணை இனத்தவர் (பெண்கள்) | பழங்குடி இனத்தவர் | பழங்குடி இனத்தவர் (பெண்கள்) | பொதுப் பிரிவு (பெண்கள்) | பிற்படுத்-தப்பட்ட வகுப்பினர் | பொதுப் பிரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **நகராட்சிகள்** | | | | | | | | |
| 1. சேர்மன் | 1 | - | - | - | 2 | - | 2 | 5 |
| 2. கவுன்சிலர் | 6 | 6 | 1 | - | 34 | 39 | 30 | 116 |
| **கொம்யூன் பஞ்சாயத்துகள்** | | | | | | | | |
| 1.கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் | 17 | 9 | 1 | - | 30 | 37 | 14 | 108 |
| 2. கிராம பஞ்சாயத்து தலைவர் | 12 | 5 | - | - | 31 | - | 60 | 108 |
| 2. கிராம பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் | 121 | 71 | 2 | 2 | 230 | 272 | 114 | 812 |

இந்த நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான உள்ளாட்சி தேர்தல் பின்வருமாறு 3 கட்டங்களாக நடத்தப்படுகிறது.

| நகராட்சி/ கொம்யூன் பஞ்சாயத்து | I. முதற்கட்டம் | II. இரண்டாம் கட்டம் | III. மூன்றாம் கட்டம் |
|---|---|---|---|
| நகராட்சி | காரைக்கால் | பாண்டிச்சேரி | – |
| | மாஹே | உழவர்கரை | – |
| | ஏனாம் | – | – |
| கொம்யூன் பஞ்சாயத்து | கோட்டுச்சேரி | – | அரியாங்குப்பம் |
| | நெடுங்காடு | – | பாகூர் |
| | நிரவி | – | மண்ணாடிப்பட்டு |
| | திருமலைராயன்பட்டினம் | – | நெட்டப்பாக்கம் |
| | திருநள்ளார் | – | வில்லியனூர் |
| வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | 364 | 631 | 634 |
| மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை | 2,30,502 | 4,44,199 | 3,28,555 |

மேற்குறிப்பிட்ட இந்த மூன்று கட்டங்களிலும் பின்வரும் பதவிகள் மற்றும் அலுவலகங்களுக்கு தேர்தல் நடத்தப்படுகிறது.

| | நகராட்சி | | கொம்யூன் பஞ்சாயத்து | | | |
|---|---|---|---|---|---|---|
| | சேர்மன் | கவுன்சிலர் | கொம்யூன் பஞ்சாயத்து கவுன்சில் உறுப்பினர் | கிராம பஞ்சாயத்து தலைவர் | கிராம பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் | மொத்த பதவிகள் |
| முதற்கட்டம் | 3 | 41 | 27 | 27 | 178 | 276 |
| இரண்டாம் கட்டம் | 2 | 75 | - | - | - | 77 |
| மூன்றாம் கட்டம் | - | - | 81 | 81 | 634 | 796 |

வாக்குகள் எண்ணும் பணி 07 மையங்களில் (புதுச்சேரி – 4, காரைக்கால் - 1, மாஹே -1 மற்றும் ஏனாம் -1) நடைபெறும். புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம், உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கென ஏற்கனவே 15 தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் 91 உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளை நியமித்து உள்ளது. மேலும், மாநில தேர்தல் ஆணையம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர்களை அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக நியமித்து ஆணை வெளியிட்டுள்ளது. அதுபோலவே, மாஹே மற்றும் ஏனாம் பகுதி வட்டார நிர்வாக அதிகாரிகளை அந்தந்த வட்டார தேர்தல் அதிகாரிகளாகவும் நியமித்துள்ளது. இதை தவிர, உள்ளாட்சி தேர்தலை சிறப்பான முறையில் மேற்பார்வையிடுவதற்காகவும் 5 நகராட்சிகள் மற்றும் 10 கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான தேர்தல்களை சீர் முறையில் ஒருங்கிணைப்பதற்காகவும், மாநில தேர்தல் ஆணையத்திற்கென நான்கு செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மாநில தேர்தல் ஆணையமானது, 6 மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை பொது மேற்பார்வையாளர்களாகவும், மேலும் 6, இந்திய சுங்க மற்றும் மத்திய மாநில கலால் / இந்திய வருவாய் பணி அதிகாரிகளை, தேர்தல் செலவுகளை பார்வையிடும் அதிகாரிகளாகவும் நியமித்துள்ளது.

புதுச்சேரியில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கென 1629 வாக்குச்சாவடிகள் நியமிக்கப்பட்டுள்ளன. அதில் தேர்தல் நடத்துவதற்கென 8500 அரசு அலுவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர். புதுச்சேரி உள்ளாட்சி தேர்தலில் **10,03,256** வாக்காளர்கள் அவர்களது ஜனநாயக கடைமையை நிறைவேற்ற உள்ளனர். அதில் 5,84,196 பேர் 5 நகராட்சிக்கும் 4,19,060 பேர் 10 கொம்யூன் பஞ்சாயத்து தேர்தல்களிலும் வாக்களிக்க உள்ளனர். புதுச்சேரியில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கென முதல் முறையாக பல்நோக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம் இவ்வாக்குப் பதிவு இயந்திரங்களை தேர்தலில் உபயோகிப்பதற்காக முதல் நிலை ஆய்வு செய்யப்பட்டு தயார் நிலையில் வைத்துள்ளது. இந்த இயந்திரங்களை சீரற்றமயமாக்கல் (randomization) முறையில் அந்தந்த தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்புவதற்கான பணிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும், புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையம், தற்போது நிகழும் கோவிட் பெருந்தொற்றை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதற்கென உள்ளாட்சி தேர்தல் பணிகளுக்காக அமர்த்தப்படும் அனைத்து அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மத்திய உள்துறை அமைச்சகம், மத்திய குடும்ப நலம் & நலவழித்துறை அமைச்சகம் மற்றும் புதுச்சேரி மாநில பேரிடர் மேலாண்மை குழு ஆகியவை பரிந்துரைத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி கோவிட் தடுப்பு நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் / வாக்காளர்கள் அனைவரும் அவசியம் முகக்கவசம் அணிய வேண்டும். மேலும், ஒவ்வொருவரும் வாக்குச்சாவடிக்குள் நுழையும் முன் கைகளை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இதுதவிர, தகுந்த சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். மேலும் வேட்பு மனு தாக்கல் செய்யும் பொழுது அதிக கூட்டம் சேர்வதை தடுப்பதற்காகவும், “கோவிட்” நோயாளிகள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு வசதியாகவும் இணையதளத்தில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கென வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், வாக்குப்பதிவு அதிகாரிகள் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் நடத்துவதற்கான படிவங்கள் வினியோக மையங்களில் ( Distribution Centers ) கூட்ட நெரிசல் ஏற்படுவதை தவிர்க்க ஒரு புதிய முறையை மாநில தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, வாக்குப்பதிவு இயந்திரங்களும், தேர்தல் நடத்துவதற்கான படிவங்கள் உள்ளிட்ட பொருட்களையும் அந்தந்த வட்ட அதிகாரிகளே (Sector Officers ) துப்பாக்கி ஏந்திய காவலர் பாதுகாப்புடன் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கே நேரில் சென்று கொடுப்பதற்கென பிரத்தியேக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**உள்ளாட்சி தேர்தலுக்கான கால அட்டவணை**

மேற்குறிப்பிட்டபடி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ளாட்சி தேர்தல், 3 கட்டங்களாக கீழ்கண்ட கால அட்டவணைப்படி நடத்தப்பட உள்ளது.

| | I. முதற்கட்டம் | II. இரண்டாம் கட்டம் | III. மூன்றாம் கட்டம் |
|---|---|---|---|
| தேர்தல் அறிவிக்கப்படும் நாள் / வேட்பு மனு தாக்கல் துவக்கம் | 30-09-2021 | 04-10-2021 | 07-10-2021 |
| வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் | 07-10-2021 | 11-10-2021 | 15-10-2021 |
| வேட்பு மனு பரிசீலனை | 08-10-2021 | 12-10-2021 | 16-10-2021 |
| வேட்பு மனு திரும்பப் பெற கடைசி நாள் | 11-10-2021 | 15-10-2021 | 18-10-2021 |
| தேர்தல் நாள் | 21-10-2021 | 25-10-2021 | 28-10-2021 |

**மூன்று கட்ட வாக்குப்பதிவு முடிந்த பின் வாக்கு எண்ணிக்கை 31.10.2021 அன்று நடைபெறும்.**

**வாக்கு பதிவு நேரம் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. இதில் கடைசி ஒரு மணி நேரம் அதாவது மாலை 5.00 மணி முதல் 6.00 வரை கோவிட் நோயாளிகளுக்கு வாக்கு அளிக்க வழங்கப்படுகிறது.**

இந்த அறிவிப்புடன் உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிமுறைகள் இன்று முதல் அமலுக்கு வருகின்றது. இத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உள்ளாட்சி தேர்தல் நடத்துவதற்கான சட்டங்கள் மற்றும் ஆணை தொடர்பான தகவல்கள், வார்டு வாரியான வாக்காளர் பட்டியல், வாக்குச்சாவடிகளின் விவரங்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் தொடர்பு எண்கள் உள்ளிட்ட அனைத்தும் புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின், இணையதள முகவரியான https://sec.py.gov.in/ –ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மாநில தேர்தல் ஆணையம் ஊடகங்கள், வாக்காளார்கள், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் வேட்பாளர்களைச் சார்ந்தவர்கள், அதிகாரிகள் மற்றும் தேர்தல் பணியில் பங்குபெறும் ஊழியர்கள் அனைவரையும் முதல் மற்றும் இரண்டாவது தவணை கோவிட் தடுப்பூசி செலுத்தி இருக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. மேலும், கோவிட் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநில தேர்தல் ஆணையம், பேரணிகள், சாலையில் கூட்டம் சேர்வது, சைக்கிள் / மோட்டார் வாகன / இலகு ரக வாகனங்களில் பேரணி, பொதுக்கூட்டங்கள் மற்றும் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்புகளுக்கு கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. மேலும், இந்த தேர்தலானது வாக்கு சேகரிப்பு பணிகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு குறைந்த காலம் மட்டுமே நடைபெறுவதற்கு மாநில தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இவை தவிர, கீழ்க்கண்ட எண்ணிக்கையிலான அ) நகராட்சி துணை தலைவர் ஆ) கொம்யூன் பஞ்சாயத்து அவை தலைவர் இ) கொம்யூன் பஞ்சாயத்து அவை துணை தலைவர் மற்றும் ஈ) கிராம பஞ்சாயத்து துணை தலைவர் பதவிகளுக்கான மறைமுக தேர்தலுக்கான அட்டவணை பற்றிய அறிவிப்பு மேற்குறிப்பிட்ட நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கான பிரதான தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டபின் அறிவிக்கப்படும்.

| பதவியின் பெயர் | நகராட்சி துணை தலைவர் | கொம்யூன் பஞ்சாயத்து அவை தலைவர் | கொம்யூன் பஞ்சாயத்து அவை துணை தலைவர் | கிராம பஞ்சாயத்து துணை தலைவர் |
|---|---|---|---|---|
| பதவிகளின் எண்ணிக்கை | 5 | 10 | 10 | 108 |

மேற்கண்ட அறிவிப்பும் அதனைத்தொடர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவும், உச்சநீதி மன்ற தீர்ப்பு மற்றும் மாநில தேர்தல் ஆணையருக்கு இந்திய அரசியல் சட்ட விதி 243K மற்றும் 243ZA அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றன.

(ராய் பி தாமஸ்)
மாநில தேர்தல் ஆணையர்